# நாலுமந்திரிகும்மி.

1690



... எலெக்ட்ரிக் பிரஸ்ஸில்
...ப்பிக்கப்பெற்றது.
...1924. [அணா 2.

உ

கடவுள் துணை.

# நாலுமந்திரி கும்மி.

## காப்பு-விருத்தம்.

பூரணமாய்நின்றபரம்பொருளைப்போற்றி
புகழ்மிகுத்தசரணந்தாள்போற்றிவாழ்த்தி
காரணன்சேரிலக்குமியாள்பாதம்போற்றி
நான்முகனோடுருத்திரனடியைவாழ்த்தி
ஆரணன்சேர்சரஸ்வதியாள்பாதம்போற்றி
அன்புடனேநாலுமந்திரிகும்மிபாடக
காரணஞ்சேர்சிவபெருமானளித்தவெங்கள்
கணபதியினிசரணங்காப்புத்தானே.

## நூல்.

68340

செந்தமிழ்போற்றுமளகாபுரிவாழு
மந்திரிநாலுபேர்மீதினிலே
சந்ததியாய்க்கும்மிபாட்டுரைக்கசிவ
தந்திமுகன்பதங்காப்பாமே. ௧

வையகந்தன்னிலேநாலுபேர்மந்திரி
மார்க்கமுடன்கும்மிபாட்டுரைக்க
செய்யும்படிக்கருள்செந்தில்வடிவேலர்
சீர்பாதமென்றைக்குங்காப்பாமே. ௨

பூலோகந்தன்னிலேநாலுபேர்மந்திரி
போதவாதித்தனுடன்பிறந்தோர்
சாலோகமுள்ளகும்மிதழைக்கத்தமிழ்
சாற்றுவேன்வாலைத்துணையாக. ௩

போதவாதித்தனும்போதவிபீஷணன்
போதவியாகானன்போதசந்திரன்
மாதயளவீகியமதுராபுரிதனில்
வாழ்ந்திருந்தார்சிலகாலமட்டும். ௪

தென்மதுராபுரியிற்சிறந்த அள
கேசனிடம்மந்திரியானதுவும்
நன்மைதரும்வேலாதுணையாகத் தமிழ்
நவிலுவேன்வாலைப்பதம்போற்றி. ௫

ஆடுஞ்சிதம்பரர்தன்னருளால்பெற்ற
ஐயன்சுப்ரமண்யர்கைக்குழந்தை
நாடெல்லாம்போற்றவேவீரபத்திரன் வாசல்
நல்லவசனப்பிரசங்கனடி. ௬

தேசம்புகழவேபோதிவைத்தார் குரு
தேவதைபாற்கடலாடிவர
வாசம்புகழ்சின்னதம்பிதமிழுக்கு
வாக்கருள்வாய்பரமேஸ்வரியே. ௭

ஆதியில்தென்மதுராபுரியிலிவர்
ஜாதியிற்காராளவம்மிசத்திற்

பாதிமதிசூடும்நாதனைப்போற்றியே
மாதையேகூடிநடந்தார்கள். அ

பாதைவழியேயிவர்நடக்கப்-பருங்
காலாய்ஒட்டகம்போயிருக்க
கோதையர்மக்களுநாலுபேர்யோசனை
கொண்டுவழியேநடந்தார்கள். கூ

ஒட்டகந்தப்பியொருமாதம்-அதை
விட்டலைந்தபொருளுக்காரன்
அட்டதிக்கெல்லாந்தேடியவர்
இட்டவேவந்துமொழிந்தானப்போ. ய

ஒட்டகமிவ்வழிகாணீர்களோவென்
றுரைத்திடநால்வரிலேயொருவன்
கட்டுடன்தப்பியவொட்டகமொற்றைக்கண்
பொட்டையோவென்றொருவனுரைத்தான். கக

கூலென்றொருவனுரைத்தாண்டி-முழங்
கால்முடமென்றொருவனுரைத்தான
வால்கூழையென்றொருவனுரைத்தான்-மொழி
வசனங்களுஞ்சரியாயிருக்க. கஉ

சொன்னவடையாளந்தான்சரியேயென்
அண்ணர்களொட்டகமெங்கேயென்றான்
பன்னியவொட்டகம்கண்டதில்லை-நடை
பார்த்துமொழிந்தோமென்றேயுரைத்தார். கங

பார்த்துஉரைத்தமொழியே-நமது
கோத்திரனுமளகேசனிடம்
சாற்றுவோம்வாருங்களிம்மொழியையென்று
நேத்தியாய்க்கூடிநடந்தார்கள். கச

தங்கம்பொன்வெள்ளியிரும்புடன்பித்தளை
சதிருடன்வெங்கலமாயுருக்கி
சிங்காரமாய்ச்செய்தகோட்டையிற்சென்றங்கே
செப்பினான்ராஜாதிராஜனுடன். கரு

செப்பியவார்த்தையைத்தான்கேட்டு-ராஜன்
செப்புவான்நாலுபேரைப்பார்த்து
விற்பனராமிவர்நாலுபேருமென்று
மெத்தவேராஜன்மனமகிழ்ந்து. கசு

ஓட்டகங்காணுமென்றுரைத்தீர் அதற்
குள்ளவடையாளமேதுரைத்தீர்
கட்டளைசெய்யாமல்நீங்கள்நாலுபேரும்
நாவாலுரைசெய்யுமென்றுரைத்தார். கஎ

ராஜனுரைத்தமொழிகேட்டுமந்திரி
நாலுபேருமனந்தான்மகிழ்ந்து
போஜனிவன்ராசன்பாதம்பணிந்துதான்
புத்திவிசேஷங்கள்கற்றவனும். கஅ

போதவாநித்தனப்போதுசொல்வானொரு
பாரிசங்கூடியிரைமேய்ந்து

பேதமையாகநடக்கவொருகண்
பெட்டையாமென்றுமொழிந்தேனென்றான். ௧௯

போதவிபீஷன்றானுரைப்பான்பாதை
போதையிலேநடந்தான்பதியே
சகதகவொட்டகநுகொர்ப்பமிதுவென்று
சந்தேகமில்லாமற்சொன்னேனென்றான். ௨0

போதவியாகர்ணனுரைப்பான்—பாதை
போகையிலேமூன்றுகால்பதிய
சாதகமாயொருகால்பதியவில்லை
தானென்றேகால்முடமென்றுரைத்தான். ௨௧

போதசந்திரமந்திரியேதுரைப்பான்பாதை
போகையிலேசக்கள்கடித்தாத்தம்
பாதைவழியில்சிதறினதாலது
கூழைவாலென்றொருவனுரைத்தான். ௨௨

இப்படியாகவேநாலுபேர்மந்திரிகள்
வெற்புலிபோலவுரைத்திடவே
செப்பமாளகேந்திரனுமகா
விற்பனமுள்ளவரென்றுசொல்லி. ௨௩

சொல்லுமொழியினாலொட்டகக்காரன்
துடர்ந்தானென்றாயிரம்பொன்கொடுத்து
சொல்லுமென்றுசொல்லித்தானனுப்பியப்போ
செப்புவான்நாலுபேரைப்பார்த்து ௨௪

பாசத்துடன்வாசல்மந்திரிகாரியம்
பார்த்து அதிகாரம்செய்யுமென்று
போசனத்துக்கோராயிரஞ்சம்பளம்
பொன்னுங்கொடுத்தங்கேவைத்தாராம். உரு

நாலுபேர்மந்திரிமாரிருக்கநல்ல
ராஜன்சிறப்புடன்வாழ்ந்திருக்க
பாலும்பழமுண்டாயிருக்கநல்ல
பங்கயமாதுநிறைந்திருக்க உசு

கிரியரவமொன்றாய்வாழ்கப்பசு
சிறும்புலியுமொன்றாய்வாழ்கப்
பாரினில்மாதமும்மாரிகள்பெய்திடப்
பட்டணத்தாறிலொருகடமை. உஎ

மேதினியேழைப்பரதேசிக்கன்னம்
வேண்டியதாயகங்கொடுத்துவர
நீதிவிசாரணைமந்திரிசெய்திட
விதியாயாவருந்தானிருக்க. உஅ

ராஜனிருந்து அரசாளமந்திரி
நாலுபேருமதிகாரஞ்செய்ய
வாசனையாகவேதானிருக்கவினை
வந்தவகைதனைக்கேளுங்கடி உகூ

பட்ட—ணமந்தக்கோட்டைகளும்பரி
சோதனைபார்க்கவேவேணுமென்று

கட்டளைகொள்போதவாதித்தனுமவன்
பட்டணஞ்சுற்றியேவந்தானப்போ. ௯0

பட்டணத்துக்குவடபுரத்தில்நல்ல
பத்திரகாளியம்மன்கோயில்
துட்டமகமாயிஅர்த்தராத்திரிவேளை
சேபதனையாகஅழுகலுற்றாள். ௯௧

பத்திரகாளிகுரல்கேட்டுசீர்
பத்தனும்போதவாதித்தனுந்
சித்தங்கலங்காமற்பத்திரகாளிமுன்
செப்பினான்போதவாதித்தனுமே. ௯௨

ஆரம்மாசொல்லிஅழுகிறதுஉன்
அடிமையிதோவந்துநிற்கிறேன்நான்
பாரம்மாவென்முகம்மாதரவேபர
மேஸ்பரியேஜெகதீஸ்பரியே. ௯௩

சொன்னமொழிதனைதான்கேட்டுஜெக
ஜோதியெனும்பத்ரகாளியம்மாள்
என்னையாதரிநீயாரடாவந்தவன்
இப்போதெனக்குநீ சொல்லுமென்றாள். ௯௪

காளியுரைத்தமொழிகேட்டுக்கரு
ணைகரன்போதவாதித்தனுமே
வாள்கரங்கொண்டமகமாயிசொந்த
வடுமையிதோவந்தேனென்றான். ௯௫

சொந்தவடுமையாய்வந்தாயானல்
சொல்லுவாய் நீயாரென்மகனே
விந்தைபெருமளகேசனிடவாசல்
மந்திரிபோதவாதித்தனென்றான். ௩௬

வாடாமகனேயென்றுரைக்கமக
மாயியைச்சுற்றியடிபணிந்து
தேடக்கிடையாதஅம்பிகையேகுரல்
செய்தவகையேதுமாதாவே. ௩௭

போதவாதித்தன்மொழிந்திடவேபரி
பூரணிமெத்தமனமகிழ்ந்து
நாதன்கயிலேயில்வீற்றிருக்குஞ்சிவ
நாயகிசொன்னதைக்கேளுமினி. ௩௮

என்றுயருன்னிடஞ்சொன்னதினல்நீயும்
என்றுயரந்தீர்க்கபோறாயோ
பொன்மலராகியமாதாவேயுன்
புண்ணியத்தில்தீர்ப்பேனென்றுரைத்தான். ௩௯

இந்தப்படிமந்திரிதானுரைக்கப்பர
மேஸ்பரிமெத்தமனமகிழ்ந்து
கந்தமலர்க்குழல்பத்திரகாளி
கருணைபுரிந்ததைக்கேளுமினி. ௪௦

மந்திரிபோதவாதித்தனேநானும்
வகையாகச்சொல்லுவேன்கேட்டிடுவாய்

தந்திரமாகவேராஜாதிராஜனுந்
தாரணிதன்னிலேவாழ்ந்திருந்தான். ௬க

தாயேயென்றுஎன்னைப்பணிந்துகொண்டால்நானும்
தாழ்ச்சியில்லாமல்மகிழ்ந்துகொண்டேன்
நீயின்றுவந்தாயேபோதவாதித்தனே
தாயொன்றுசொல்லுவேன்கேள்மகனே. ௬௦

நாளைப்பொழுதஸ்தமானவுடனங்கே
நாழிகையீரேழுசென்றபின்பு
வேளைக்குதவியபஞ்சணைமெத்தையில்
வேந்தன்மனையாளுடன்படுக்க. ௬௩

சர்ப்பமொன்றுவந்துதீண்டுமதையாபின்னுஞ்
சாதனையாய்மறுதேசத்தாரும
கப்பம்விடிமுறைக்குப்பெரியமயாற்
கையிலேவாங்கநெஞ்சுடுருவும். ௬௪

சம்பாவரிசிநஞ்சாகவருமதைச்
சாப்பிட்டால்பஞ்சபூதமபோகும்
அன்பாயிவ்வளவுந்தீர்ப்பையாலைராசன்
ஆளுவான்பூலோகமுள்ளளவும். ௬௫

என்றுமகமாயிதானுரைக்கப்பொன்
னிணையடிமைத்தொழுதேபணிந்து
நன்றுவுன்பாதகிருபையினாலிந்த
நான்விலக்குவேனென்றுசொல்லி. ௬௬

தாள்பணிந்துமவன்வந்திருக்கதானப்போ
தானுங்கதிரோனுதித்திடவே
காளிதான்சொன்னபடிநடத்தவென்று
காரணமாகச்சிறித்தாண்டி. சஎ

வந்துதேசவுடுவரையுஞ்சம்பா
வர்க்கங்களும்பணியாரமுடன்
சுந்துளவமளகேசனிடத்திலே
சொந்தமாய்க்கொண்டுபோய்வைத்தாண்டி. சஅ

கண்டுஅரசன்மகிழ்ந்திருக்கஅப்போ
காரணபோதவாதித்தனுமே
பண்டின்றதிசயமாயிருக்குதென்று
மந்திரிசொல்லவேராஜனுமே. சகூ

காரணமேதுகாண்மந்திரியேஅதைக்
கேட்டுவாயென்றுராஜன்கேழ்க்கப்
பார்மன்னர்விட்டவிடுமுறையைநாளைப்
பார்க்கலாமென்றொருபக்கம்வைத்தார். ரு0

மந்திரிசொல்லவேராஜனுந்தானப்போ
சிந்தைமிகவுங்களிகூர்ந்து
எந்தவிதங்காணுமந்திரியேயென்று
யேகினன்போசனச்சாலையிலே. ருக

சாதம்அரிசிசமைத்திருக்கஅன்னந்
தானேபொசிக்கின்றவேளையிலே

690

# நாலுமந்திரி கும்மி



OFFICE OF THE REGISTRAR OF BOOKS MADRAS 22 DEC 1924

சென்னை, கோள்டன் பிரஸ்ஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

வேதன்விதியைவிலக்கென்றுமந்திரி
வேணுமூணுபிடிச்சாதமென்றான். ருஉ

அன்னமென்றுமந்திரிதான்கேழ்க்கமகா
அளகேசனுமூணுபிடிகொடுத்தான்
தின்னென்றுசொல்லிக்கொடுத்திடுஞ்சாதத்தைச்
சீலையில்வைத்துமுடிந்தாண்டி. ருங

அன்றுகதிரோன்மறைந்திடவே அர்த்த
ராத்திரிகாளிதன்சொற்படிக்கு
சென்றுஅரண்மனைதான்புகுந்துராசன்
தேவியுடன்நித்திரைசெய்கையிலே. ருச

சர்ப்பம்வரக்கண்டுபோதவாதித்தனும்
தன்கையில்மந்திரவாளதினால்
விறபனபோதிவாதித்தனுஞ்சர்ப்பத்தை
வெட்டுரெண்டுதுண்டாகவேதான். ருரு

வெட்டிவிழுந்திடும்பாம்பினிடரத்தம்
மெல்லிநல்லாள்கொங்கைமீதில்விழப்
பட்டபாடுகளுமிப்படியோவென்று
பார்த்தானும்போதவாதித்தனுமே. ருசா

சுண்டுவிரல்நகத்தாலெடுத்துவிரல்
துண்டாய்நறுக்கியேகூட்டிவைத்தாள்
கண்டுதானாடாவென்றுரைத்தாள்தேவி
காரணபோதவாதித்தனென்றான். ருஎ

இராசனைத்தேவிதானெழுப்பிஉல
மாச்சுதேபோதவாதித்தரைக்
காசம்பொருலபயனுமென்கொங்கையைக்
கைதொடாரீதமோவென்றுரைத்தாள். கஅ

தேவியுரைத்தமொழிகேட்டு-அப்போ
திடுக்கென்றாசனெழுந்திருந்தான்
பாவிப்பயல்செய்தஞாயத்துக்குயென்ன
பாவனைசெய்குவோமென்றுசொல்லி. கக

நிற்கும்போதரண்டாஞ்சாமங்காக்கும்நல்ல
நேசன்போதசந்திரமந்திரியும்
பக்குவமேதுமறியாமற்பாரி
சுற்றியேமந்திரிவீடுவந்தான். சுஉ

வார்த்தைகண்டங்கேகூடாவென்று
வழுத்தினனுமளகேசனுந்தான்
மார்க்கமுடன்சொல்லக்கேளுமென்றிரண்டா
மந்திரிசொல்லத்தொடர்ந்தானே. கக

காஞ்சனமாமிருகைசிரங்கூப்பியக்
காலையில்மன்னவனைத்தொழுது
வாஞ்சையாளுமிடத்திற்பிரதேச
மன்னருக்குத்திரஞ்சொல்லாமல். கஉ

பிள்ளையைப்போலேவளர்த்தானுந்-தினம்
பெரும்மயிாதிமென்றுசொல்லி

வெள்ளைநிறமுள்ளகூருளசிங்கத்தை
விரும்பியேகூட்டிநடந்தானும். ௬௩

கேதனவாரிபட்டணத்தில்நல்ல
கேசவனென்றொருசெட்டியிடம்
சாதகமாயவன்வேடனுமப்போது
தாவியவரிடமேதுரைப்பான். ௬௪

செட்டியாரேயெங்களுக்குத்திரவியம்
செல்லவேவேணுமோராயிரம்பொன்
வட்டிக்கொடுத்துத்திரும்பும்வரைக்கும்
வனமிருகச்சிங்கத்தையீடாக. ௬௫

வைத்துக்கொள்ளுமென்றுசீட்டெழுதிகையில்
வாங்கினனாயிரம்பொன்தனையும்
கைத்துகையானவனமிருகச்சிங்கத்தை
கையிற்கொடுத்துவணிகனிடம். ௬௬

வாருமவன்மிருகச்சிங்கமுன்னைவைத்து
வாங்கினேன்செட்டியிடம்பொருளுஞ்
சேரும்வரைக்குட்வரிட்டகட்டளை
செய்துகொண்டுநீவாழ்ந்திருப்பாய். ௬௭

என்றுபுலிவேடன்நாய்க்குப்புத்திச்சொல்லி
யின்பமாய்தன்னிடதேசமதில்
சென்றுநிரையுங்கொடுத்துவிட்டுப்பணஞ்
சேகரஞ்செய்திடுங்காலையிலே. ௬௮

வேடன்மனையிலேதானிருக்கவன
மிருகச்சிங்கம்வணிகனிடமிருக்க
பாடுபட்டவூழ்வினைகளினால்வந்த
பாவனைசொல்லுவேன்கேளுமையா. ௬௯

கப்பல்வியாபாரஞ்செய்யவேணுமென்று
காரியமாகவேசிங்கமதை
முப்பாலுஞ்சோறுமாயுண்டுகொண்டுவீட்டை
மூதுணர்ந்தேநீகாருமென்றான். எ0

நல்லதென்றுசொல்லிசிங்கஞ்சொல்லச்செட்டி
நயந்ததோணியிலேறியபின்
வல்லமாகவேசெட்டிபெண்சாதியும்
வாகானசோரனைத்தான்சேர்ந்து. எக

சோரனநுதினம்வருகிறதும்-அவனைச்
சொந்தமாய்க்கூடிமருவுவதும்
சாருமுல்லைப்பாக்குத்தின்கிறதும்நல்ல
சரசபோகங்கள்செய்கிறதும். எ௨

கைப்பிடித்திருவோரும்ஆடுவதுமகாமன்
கலைகள்முறைதனைப்பாடுவதும்
இப்படியாகவேசோரனுடன்கூடி
யின்பமாய்வீட்டிலிருக்கையிலே. எ௩

வீரன்வனமிருகச்சிங்கங்கண்டங்கேதான்
வேளைவாட்டுமேயென்றுசொல்லி

பாரயோசனை தன்மனதில்நாய்
பண்ணிக்கொண்டுதா னிருக்கையிலே. எச

வந்தந்தசோரனும்வீட்டிற்புகுந்ததே
வைாவனுமவனைக்கடிகடித்து
கந்துவேகபிளங்தெரிய அதைத்
தான்கண்டுசெட்டிமனையாளும். எரு

கையைநெறித்து அலனையெடுத்தாரும்
காணுமலாழக்குழிதோண்டி
ஐயையோவென்றுயெடுத்தவனைக்குழி
ஆழத்திலிட்டுப்புதைத்தாளே. எசு

வீட்டிலதிசயமாயிருக்கக்கடல்
மேவியசெட்டித்திரும்பிவர
தாட்டிகமாகவேவீட்டில்வந்திருந்துச்
சந்தோஷமாகவேயிருக்கச்சிங்கம். எஎ

கோட்டுவணிகனத்தான்புரண்டும்பின்னும்
கொல்லையிலோடிப்பின்னூனையிட்டு
வீட்டுசெட்டியும்போகையிலேமுன்னே
செத்தபிணத்தைவெளியிழுத்து. எஅ

காணிஎன்னவகையென்றுசெட்டிகேட்க
காயுமுண்மையைச்சொல்லுதுகாண்

மாணியிலிவனைக்கடித்ததுவும் இவன்
மாண்டதருமம்பெண்டீர்சேர்ந்ததுவும். எகூ

அன்னையன்றுமுதல்தன்னைக்கண்பாராமல்
அன்னமிடாமற்றுரத்தியதும்
தன்னுள்ளேதானுமெலிந்ததுவும் மெத்த
சங்கடமிதற்கவன்செய்ததுவும். அ௦

நாயுமுறைத்தமொழிகேட்டுச்செட்டி
நாயகிதன்னைவரவழைத்து
வாயைக்கிழித்துதுரத்திவிட்டான்செட்டி
வாரும்வனமிருகச்சிங்கமென்றான். அக

பாசமுடன்வேடனெழுதிக்கொடுத்திட்ட
பாங்காமுறிச்சீட்டைத்தானெடுத்துச்
சொச்சமவன்செட்டிநாயின்கழுத்திலே
சொந்தமுடன்செட்டிசொல்லிடுவான். அஉ

எந்தனுக்குசெய்தவுபகாரந்தனை
சிந்தையில்நானுமறவேனே
சிந்தைமகிழ்ந்துதான்நீயும்வேடனிடஞ்
சேரும்வனமிருகச்சிங்கமென்றான். அங

ஆமென்றுசொல்லிவனமிருகச்சிங்கமும்
அப்பாதைவிட்டுநடந்திடவே
நாமென்றுநாணயங்கொண்டுபோயஞ்சி
நாமேதிரும்புவோமேன்றுசொல்லி அச

காட்டுக்குள்ளேவேடன் தான்வரவேயெதிர்
கண்டுவணங்கியசிங்கமதை
சீட்டுக்கழுத்திலேதான்போட்டு அப்போ
சென்றுதன்வேடனைக்கண்டதுவே. அரு

வந்தவனமிருகந்தன்னைக்கண்டுஇது
வஞ்சனைசெய்துமேவந்ததென்று
அந்தவிடத்தில்செடியினிற்கட்டி
அறுத்துக்கழுத்தைநடந்தாண்டி. அ

பட்டணஞ்சென்றுஇடைவழியிற்செய்த
பார்வினைசெட்டியுளம்புகுந்து
கட்டியழுதுவணிகனுரைத்ததை
காரணமாய்ப்பழிவந்ததென்று. அள

வேடனுடனேமடிந்தாண்டிசெட்டி
கூடவேதானுமிறந்தாண்டி
தேலையழிந்துமொழிவேடனிட
தேவியுங்கூடமடிந்தாளே. அஅ

இப்படியாகமடிந்தார்கள்முன்னு
துளதொன்றுமதீர்க்கம்விளங்காமல்
அப்படிக்கல்லவோவந்துமுடிந்திடு
மையனேயென்றுமுரைத்தாண்டி. அக

போதவிபீஷணன்சொன்னகதைகளைப்
பொருந்தவோசனுந்தான்கேட்டு
நீதிமுறையிதுதான்சரியென்று
நெஞ்சில்நினைந்துநீயேகுமென்றான். ௯௦

புத்தியென்றுசொல்லித்தான்போனான் அப்போ
போதவியாகர்னன்பட்டணத்தைச்
சுற்றிவருகையில்ராஜனைகண்டப்போ
தோத்திரஞ்செய்தங்கேநின்றாண்டி. ௯௧

நின்றவன்ராஜனைக்கண்டுவணங்கிட
நேசங்காண்போதவியாகர்னனே
தென்றல்வந்துவீசுஞ்சப்பிரகூடமதில்
தேவிபுடனேபடுத்திருக்க. ௯௨

நித்திரைசோதித்து அர்த்தராத்திரிவேளை
பெற்றதாயென்றுநினையாமல்
காதகதுரோகிதான்போதவாதிதனென்
காரிகையைத்தொடநீதியுண்டோ. ௯௩

என்னடாபோதவியாகர்னனேயென்று
சொன்னதெல்லாமந்திரிதான்கேட்டு
மன்னவன்புரம்பணிந்துகொண்டுமூன்றாம்
மந்திரிச்சொல்லத்தொடர்ந்தானும். ௯௪

வாருமையா அளகேஸ்வரரேயிந்த
வையகமாளுமனுவேந்தர்

பாருலகமாளுமளகேஸ்வரர் முகம்
பார்த்துமனுநீதிசொல்லலுற்றான். கூரு

ஏதுபாராபாஞ்செய்தாலும் அதில்
இன்னதுவென்றேயறியாதில்
சூதுமுன்னாலேகடந்தகதையொன்று
சொல்லுறேன்கேளுமென்னையாவே. கூசு

சந்திரகிரியென்றொருதேசமையா-அந்தத்
தாரணியிலொருவேதியனும்
மந்திரத்தாலோதுமுறையறிந்து ஒரு
மைந்தனில்லாதபடியாலே. கூஎ

புத்திரவாஞ்சைபெரிதாகிகிரிப்
பிள்ளையைத்தானீன்றபிள்ளையைப்போல்
எத்தேசகாலமும்ஐயனுந்தேவியு
மேந்தியிருகையினால்வளர்த்தார். கூஅ

கந்தவேள்தன்கிருபையினால் சர்ப்பங்
காரிழையீரைந்துநாள்சுமந்து
மைந்தன்பிறந்துவளர்ந்திடவேபெற்ற
மாதாவுமெத்தமனமகிழ்ந்து. கூகூ

தொட்டிலிற்பிள்ளைபடுத்திருக்ககிரிப்
பிள்ளையும்பத்திரமாய்க்காக்க

பெட்டியெடுத்து அறைக்கீரைக்காகவே
போனாள் தன்கொல்லைக்கிணற்றருகே. ௱

கொல்லைதனிலம்மா தானிருக்கக்கிரிப்
பிள்ளையும்பத்திரமாயிருக்க
தொல்லைவூழ்வினையிலேவந்த
துயரத்தைச்சொல்லுமேறன்கேளுமையா. ௱௧

கெம்பீரமாய்ப்பிள்ளை தானிருக்கராகு
கேதுவும் தட்டிலின்மீது தங்க
தம்பியைத்தீண்டவருகுதென்றுகிரி
தானுமேபாய்ந்துகடித்திடவே. ௱௨

பாம்புகடிபட்டுசாகற்பெற்ற
பாவியிடத்திலேகிரிப்போக
பாம்பயிடரெத்தம்வாயிலிருக்ககண்டு
பாலகனைக்கொன்றிங்கேவந்ததென்று. ௱௩

முன்னும்பின்னுமவளறியாமளவள்
முற்குணம்பாதொன்றுபாராமல்
பன்னருவாள்கையில்தானெடுத்துகிரி
தன்னைப்பிடித்துக்கழுத்தறுத்தாள். ௱௪

கிரிதனையுங்கழுத்தறுத்தாளந்தக்
கேவலமாகியமாபாவி
மாரியழுதுபிரண்டுவிட்டு
வாசலின்மூன்வந்துபார்க்கையிலே. ௱௫

சர்ப்பமிரந்துகிடக்கிறதும்பிள்ளை
தானிருந்துவிளையாடுறதும்
இப்படியாய்ப்பழிவந்ததென்று அந்த
வேந்திழைபிள்ளையுடனிறந்தாள். ௯௬

வேதியனும்வெளிப்போனவனுமிதை
மெய்ப்புடனேவந்துபார்க்கையிலே
ஆதிமுடிவுகளிப்படியோவென்று
ஐயருங்கூடயிறந்தாராம். ௯௭

இந்தப்படிக்குமிருந்தார்கள்முன்னு
ளேதென்றுந்தீர்க்கவிளங்காமல்
அந்தப்படிக்கல்லோவந்துமுடிந்திடு
மையனேவென்றுவுரைத்தானும் ௯௮

மூன்றுமந்திரிபோதவியாகர்னன்
முத்தமிழ்போற்கதைசொல்லிடவே
தோன்றும்நீபோவென்றுரைத்திடவேயப்போ
போதசந்திரன் தானும்வந்தான். ௯௯

வந்தவன்ராசனைக்கண்டுவணங்கிட
வாருங்காண்போதசந்திரனே
அந்தப்புரத்துக்குட்போதவாதித்த
னுக்கினைசெய்ததைகேட்கிலையோ. ௱

மாறுடன்பஞ்சணைமெத்தையின்மேற்சப்ர
மஞ்சத்தில்நானும்படுத்திருக்கச்
சூதுசெய்யாத்திரிவந்தவன்என்னிட
தோகையரைத்தொடநீதியுண்டோ. கககக

மந்திரியென்னடாவென்றுரைக்கஅந்த
மன்னவன்பாதம்பணிந்துரைப்பான்
செந்திருமேவியதிண்புயமேஜெக
தீஸ்வரனேஅளகேஸ்வரனே. ககஉ

பொல்லாதபோதவாநித்தனென்று
பிறந்தநோதங்கள்திருவுளத்தில்
சொல்லுமீதுள்ளதுவென்றறிந்தாலுமபின்
ஒன்றுபத்தாகவிளங்கவேணும். ககங

ஒன்றுபத்தாகவிளங்காமல்அதில்
உள்ளபடியேநடவாமல்
சொன்னமொழியாலேகெட்டதினாலந்த
துன்பமொருகதைகேளுமையா. ககச

மிதிலையென்றொருதேசமையாகண்ணு
மில்லாதவன்மிகுகுருடன்
கதலிபோலவன்றேவியைக்கூட்டிபோ
காசிவழியேநடந்தாண்டி. ககரு

பாதிவழியேவந்திருக்க ஒரு
பாதகநல்வழி தானடக்கக்
கோதையவனுட னாசைகொண்டுபிறனிக்
குருடனைவிட்டுநடந்தாளே. ககசு

தேவிகுருடனைத்தான்பிரியப்பர
தேசிப்போலாண்டியாய்தான்புலம்பப்
பாவிப்பயலாலேவந்திடுநியாயங்கள்
பாங்குடன்சொல்லுகிறேன்கேளுமையா. ககஎ

காவேரிபட்டணமீதிருந்துவொரு
கலிங்கன்செட்டியவன்தேவியுடன்
கோபமாய்மாமனார்வீட்டிலிருந்து
குருடனிருக்கும்வழியில்வந்தான். ககஅ

வந்தவணிகன்குருடன்புலம்பிய
வார்த்தையைக்கேட்கஅவனுரைப்பான்
பந்துமுலையாளன்தேவியுடனிந்தப்
பாதைவழியாகவந்திருந்தோம். ககசு

வெள்ளாளனென்றொருபாவிவந்தானவன்
மெல்லிநல்லாளையவன்புணர்ந்தான்
உள்ளமகிழநடந்தார்கள்நானும்
ஒண்டியாய்ஆறுநாள்பட்டினியே. கஉ0

நின்றுதவிக்குறேன்காட்டுக்குள்ளேஉங்கள்
நேசமாயென்னையுந்தான்கூட்டிச்
சென்றுஒருநகர்தன்னில்விட்டாலுங்கள்
க்ஷேமப்பலனென்றுஉண்டாகும். கஉக

அந்தகன்சொன்னமொழிகேட்டுச்செட்டி
அன்னமும்ரொம்பவேதான்போட்டு
கொந்துமுலையாளைக்கொண்டுபின்னால்
கூட்டிவாவென்றுரைத்தாண்டி கஉஉ

கூட்டிவாவென்றுரைத்திடவே
கோதையும்நாயகனைப்பார்த்து
காட்டிலிருக்குங்குருடனைக்கூட்டியே
காசினியிற்போகவுஞாயமில்லை. கஉங

நாயகிசொன்னதுங்கேளாமல்செட்டி
நன்மையுண்டாமென்றுதானினைந்து
தாயகமாகக்குருடனைக்கூட்டியே
தானேவழியில்நடந்தார்கள். கஉச

சிங்களதேசத்தில்போய்ச்சேர்ந்து
செட்டியார்வீட்டிலேதானிறங்கி
திங்களுதிக்கச்சமையல்செய்துஇவர்
திங்கதிரோனுமுதித்திடவே. கஉரு

மூவருங்கூடிவிஜயநகாமே
முந்தியப்பாதைவழியில்வந்தார்
யாவருங்கேள்வியிவ்வூரிலில்லையென்
றூன்பாவிகுருடனுரைத்தாண்டி கஉசு

பாவிகுருடனுரைத்திடவே அந்தப்
பட்டணத்திலுள்ளசெனங்களெல்லாம்
கூவியழைக்ககுருடனுக்குசெட்டி
கோதைமூமனையும்பார்த்து. கஉஎ

ஏது அழைத்துவென்றுறைக்க அப்போ
தீவினைவந்தகுருடனுமே
மாதுவுடனேவருகையிலேசெட்டி
மையல்செய்துபெண்ணைத்தான்பிடித்து. கஉஅ

என்னைவிட்டுபோறனென்றுசொல்லிக்கூட்டி
யேங்கியழுகிறேனென்றுசொல்லி
மன்னுங்கண்கெட்டவன்சொல்லைகேட்டுராசன்
வகையொன்றும்விளங்காமல். கஉகூ

செட்டியைவெட்டவேதானுரைத்தான்பெண்ணை
கெட்டியேசுண்ணும்பறையடைத்தான்
மட்டிக்குருடனும்ஒண்டியாய்ப்பின்னும்
வாமறுசாரந்தெரியாமல். கஙo

காட்டுக்குள்ளேசெட்டிவந்தபிறகிவர்
காப்பாற்றியன்னங்கொடுத்ததுவும்
நாட்டுக்குள்ளேகொண்டுவந்ததுவும் அந்த
நாறியென்பெண்ணென்றதுவும். கரு௧

நீதிகொட்டராசன்கேட்டதுவும்என்னை
நீதியுடன்வெட்டுபட்டதுவும்
சோதிமுகத்தாளைநம்பிடத்தில்விடச்
சுண்ணாம்புகால்வாயில்வைக்கலுற்றார். கரு௨

பட்டினியாயாறுநாள்காட்டுக்குள்ளே
பசியாற்றளர்ந்துநொந்தாற்போல்
செட்டிக்குச்செய்ததுரோகத்தையென்றுநான்
தீர்ப்பனென்றுசொல்லித்தானபுலம்ப. கருரு

தூதுவரோடிக்குருடன்சொன்னமொழி
சொல்லிடராஜன்மனங்கலங்கி
எதுவினைசெய்தோமென்றுஅவன்
எத்திக்குருடனைத்தான்வதைத்தான். கருச

முன்னாலேசெத்தவரனேகமுண்டு அதை
யென்னால்சொல்லமுடியாது
பன்னவேகண்டுமிருந்தாலுமதைப்
பாங்காகவேவிளங்கவேணும். கருரு

மந்திரியாமிந்தம்போதசந்திரன்கதை
மார்க்மமுடன்சொல்லதான்கேட்டு
சந்திரன்போய்க்கதிரோனுதிக்கராசன்
தானங்கள்செய்துகொலுவிருந்தான். கருகூ

ஆதிநாள்மந்திரிமகளேயெல்லாம
அழைத்துவரச்சொல்லிதானிருந்தான்
சோதிமுகமுள்ளராசனளகேசன்
சொல்லுகிறவார்த்தையைக்கேளுமினி. கருஎ

யாவியுடலுமொன்றுயிருக்கவென்ன
காரணங்காணும்அமைச்சர்களே
தேவியுடநானும்பஞ்சணைமெத்தையில்
சிங்காரமாகப்படுத்திருக்க. கருஅ

போதவாதித்தனும்வந்தானும்அப்போ
பொற்கொடிகோதையைத்தொட்டானும்
கோதைபதரியேஆரடாவென்றுதான்
கேட்கவேபோதவாதித்தனென்றான். கருகூ

இப்போர்க்கொத்தபோதவாதித்தனை
யென்னசித்திராக்கினைசெய்கிறது
செப்புவீரென்றுமன்னன்வெகுண்டங்கே
சிறியெழுந்துகடுகெடுத்து. கசO

போதவாதித்தனைத்தான்பார்த்துராசன்
யோசனைகளெல்லாமுறையுமென்றான்
நீதிமுறைநடந்தாயேயென்ன
நிந்தனையெல்லாமுறையுமென்றார். ௧௭௧

மந்திரிமார்களுனாரத்திடவேபோத
வாதித்தன்முன்பின் நடந்தகதை
தந்திரமாகவேவுரைத்திடவே அந்தத்
தானனைக்கேட்டுஅனைவோரும். ௧௭௨

பூருவமாகியமந்திரியேமகா
புண்ணியமானமனுநீதி
பாருலகாளுமாளகேசன்முகம்
பார்த்துமனுநீதிசொல்வாண்டி. ௧௭௩

செம்மையாய்முறைத்தீரேபெண்
சித்தமனம்போல்நினைத்தீரே
நன்மைசெய்யத்துன்மையானகதையொன்று
நான்சொல்லுகிறேன்கேளுமையாவே ௧௭௪

கோசலையென்றொருதேசமையா
கோவிந்தனென்றொருவேதியரும்
மாசிலாத்திருஐயனுமேஅந்த
மாநகரில்நெடுநாள்முதலாய்த். ௧௭௫

தேகியென்றேபேருதான்வாங்கிஇந்த
தேசத்தில்பிச்சைகள்தானெடுத்து
ஆகமுடனேதழைத்திருக்கஅந்த
அம்மன்கிளியொன்றுதானவளர்த்தாள். ௧௪௬

பிள்ளையைப்போலேஅதைவளர்த்தார்தமிழ்
பேசவும்நன்றாய்ப்பழக்கிவைத்தாள்
தெள்ளுமனுவிக்கியானமோதிவைத்தாள்எல்லா
தேசபாஷைகளுங்கூறிவைத்தாள். ௧௪௭

பேசியேபச்சைக்கிளிதானும்பெற்ற
பேதைஇவளென்றுதானினைந்து
வாசமுடன்விட்டுமேலாகப்பா
லோகமுடனுசையிருந்திடவே. ௧௪௮

பட்சிகள்கூடிஅநேகங்கிளிகள்
பாதையிலாகாசமேற்பாக்க
கெற்சிதமாகக்கிளிகள்பறந்ததைக்
கேட்டிருந்ததுஎங்கேபோரீரென்று. ௧௪௯

68340

எங்கேபோறீரென்றுதான்கேட்கமுன்னே
யேகியேபச்சைக்கிளிதானும்
மங்கையெனுங்கடல்மீதிருக்குந்திவ்ய
மாங்கனிக்குப்போறோமென்றதுவே. ௧௫௦

வாரிக்கனிகள்பொசிப்பதென்ன இந்த
வையகத்திற்கனிதானிருக்க
கூறுமென்றுகிளிகளுரைக்கவே
கூடியிதுவும்பறந்திடவே. ௧௯௧

அன்னைபிதாவும்வயதல்லவே இவர்
தானுபொசித்தார்பதியாள்வாரென்று
எனறைக்குங்காப்பாற்றிடுவாரென்று
யேகிக்கனிகொண்டுவந்ததுவே. ௧௯உ

விட்டுங்கிளிகனிகொண்டுவா அதை
தாவென்றுவேதியன் தானவாங்க
தாட்டீகமாகக்கிளியொன்றுரைக்கமுன்
தாறினையெல்லாமுறைத்திடவே. ௧௯௩

தாறினையெல்லாங்கிளியொன்றுரைக்கமுன்
தாவென்றுவேதியன் தான்வாங்க
பார்த்தனிவாழ்கிறராஜனுக்கு அந்தப்
பார்த்தன்முன்கொண்டுவைத்தானும். ௧௯௪

இராஜன்கிளியையுந்தான்பார்த்து
யோனுமைசேதியெல்லாங்கேட்டு
போசன்மனதுமகிழ்ந்திடவேயிதைப்
பூமியிலுள்ளோர்பிழைக்கவென்று. ௧௯௫

ஆவலுடன்மாமாம்வைத்ததுவும் அது
ஆகாசமாகவளர்ந்ததுவும்
காவலுடன்கட்டாய்த்தான்பார்த்து நிதங்
காத்துவருகிறநாளையிலே. ௩௫௩

வேதியன்வீட்டிற்கிளியிருக்க மாவும்
வேந்தனிடந்தனிலேயிருக்க
பாதிமதிசூடும்நாகனல்வந்திடும்
பார்வினைமீண்டதைகேளுமையா. ௩௫௪

மாவுமொருகனிதான்பழுக்காகு
கேதுவும்நாளதுமேற்படுக்க
பாவுமீறிப்பகலோடினகாந்தியாற்
பாம்புவிஷங்கனிவாங்கியதே. ௩௫௫

சூரியகாந்தியாய்ப்பாம்புவிஷங்கனி
கொட்டிடாராஜனறியாமல்
கூறியமாங்கனிகொண்டுவாடாவென்று
கொற்றவன்சொல்லத்தொடர்ந்தானும். ௩௫௬

தூதுவரோடிப்பிடுங்கிவா அதைத்
தொல்லுலகெல்லோருந்தான்பார்க்க
மாதுபுயன்குருவானபெரியோரே
மாங்கனிதின்றுமென்றேயுரைத்தான். ௩௫௭

மாங்கனியைகுருநாதன்றின்னவுயிர்
வாங்கவேமனிடமபோக
யேங்கியேராசனும்வேதியன்பாவியை
யிப்போதுகொண்டுவாவென்றுரைத்தான். ௧௬௧

கொண்டுவந்தார்மறைவேதியனைத்தான்
கோத்தபிர்மதியானத்தினால்
கண்டுனைவிட்டிடுமென்றுசொல்லிஒற்றைக்
கண்ணைப்பிடுங்கியேவிட்டாரே. ௧௬௨

வேதியன்கண்ணைப்பறிகொடுத்தநாலு
வேகமாய்வீட்டுக்குத்தானடந்து
சாதனையெல்லாம்நீசெய்தாயேகிளி
தன்னைப்பிடித்துக்கழுத்தறுத்தான் ௧௬௩

கொற்றவனும்பின்னறிந்துசெய்யாமலே
கோவிந்தனும்வனம்பாராமல்
சித்தமனம்போலசெத்தார்கள்பின்னுந்
தீவினைவந்ததைக்கேளுமையா. ௧௬௪

பட்டணந்தன்னிலேவீற்றிருக்கும்பல
சாதியிலேயொருவண்ணாத்தி
கட்டியுருண்டவர்மாமிமருமகள்
கைகலந்துசண்டைசெய்துகொண்டார். ௧௬௫

மாமிமருமகள்மேற்பகைத்துப்பொல்லா
மடிபிடிசண்டைதான்கொடுத்து

பூமிதனிலேநச்சுமாங்கனியைப்
பொங்கமுடனவள்தானெடுத்து. ௧௬௬

திறமுடன்தின்னவவளுமப்போது
க்ஷணத்திலுருவந்தான்மாறி
அறுபதுவயதுள்ளவள்மாங்கனி
யாற்பதினறுவயதானாள். ௧௬௭

வேறுபட்டுருபமானதைக்கண்டவள்
வெட்கமாய்மாவின்கீழிருந்து
தேறும்பரமனைச்சிந்தித்துசிந்தையிற்
றியானம்பண்ணியுமக்கிழவி. ௧௬௮

மாவினிழலிலவளிருக்க விந்த
மாமியைத்தேடிமருமகளும்
கோபமாய்போனவள்நச்சுமாங்கனி
கொன்றதோவென்றுகிழவிதனை. ௧௬௯

என்னிடமாமியாள்சண்டையிட்டாளவ
ளிவவழிகாணவோவென்றுரைத்தாள்
சொன்னமருமகள்தன்னையே நோக்கித்
தோரணையெல்லாமுரைத்தாளே. ௧௭௦

உந்தனிடஞ்சண்டையிட்டதுவும் நான
உயிர்விடுவோமென்றுவந்ததுவும்
இந்தமாங்கனியைதின்றதுவும் இப்போ
இனிதாகவயதுவளர்ந்ததுவும். ௧௭௧

வார்த்தைகள்சொல்லியேமாமியைக்கூட்டி
வாவென்றுவீட்டிலழைக்கையிலே
சாத்திரகளிந்தாடத்தையுஞாயமுந்
தானறிந்துராசன்கேட்டதுவும். கஎஉ

கேட்டுவண்ணாத்தியைக்கூட்டிவந்துரா்சன்
விட்டநிறுத்தியுரையுமென்றார்
நாட்டுக்காகாமலிருந்தெனையாநஞ்சு
மாங்கனியிலொன்றுதானெடுத்து. கஎஙு

என்னைமருமகள்சொன்னதற்காக
யிறந்திடுவோமென்றுதானினைந்து
தின்னேன்பழநிறம்போய்வசிகாரத்
தேமலுங்கண்டேனெனவுரைத்தாள். கஎச

மாங்கனிதின்றதைச்சொல்லிடராசனும்
மாங்கனியிலொன்றுகொண்டுவந்து
சாகநிறமானபேருந்தின்ன நல்லச்
சடலமும்பதினாறுதானாச்சு. கஎரு

கண்டுஅரசன்மகிழ்ந்துகொண்டு முன்னே
கண்ணைக்கெடுத்தமறையோனைக்
கொண்டுவருகவுஞ்சொல்லியேராசனுங்
கூறினான்வேதியனைப்பார்த்து. கஎகூ

பார்த்துசெய்யாதமுறையாலே செய்த
பாவம்பெரியோர்பொறுக்கவேணும்

சேர்த்துக்கொள்ளுமென்றுதானுரைத்த வெகு
செம்பொன்னைவாரிக்கொடுத்தாராம். கஎஎ

வேதியன்செம்பொன்னைத்தான்வாங்க அவன்
வீட்டுக்குவந்துமனையாளுடன்
பகதிமதியணிபவஞ்செயலாற் கிளி
பரமனைவந்தங்கேதேடையிலே. கஎஅ

என்றுமறையோனிறந்தாண்டி அதை
கண்டுமனைவிமடிந்தாளே
நன்றுதானுச்சுதேஎன்றுசொல்லி அந்த
ராசனுங்கூடமடிந்தாராம். கஎகூ

இராசனிறந்திடத்தேவியும்பின்னுள
நற்றுணையாகியபேர்களெல்லாம்
இராஜனுக்குப்பின்னிறக்குமுயிர்போ
லென்றுவிட்டானனேகமையா. கஅ0

பச்சைகிளிதனைவளர்க்கவே
பாம்பாலேதீமைவிளைந்திடவே
வைச்சுப்பின்னேதுமறியாமற் பின்
பாதைவழிபோலேவந்துவிடும். கஅக

என்றுமநுநீதிமந்திரிசொல்லவே
யின்பமாய்ராசனுந்தான்கேட்டு
நன்றுநன்றுசபைதனிலேநாலு
பேர்மந்திரிமாரையுந்தான்கேட்டு. கஅஉ

சோதன்செய்தபோதலாதித்தனைச்
சொல்லுவான்ராஜ்னளகேசன்
நீசெய்தஞாயங்கள்தன்னையோசனும்
நிச்சயமாகவடிபணிந்து. க௮௩

பாரில்பசித்தாமுகம்பார்த்துப் பசி
யாற்றப்பசிவந்துசேர்ந்தார்போல்
வீரத்துடனேதான்கேளுமென்றுபேர்த
வாதித்தனுங்கதைசொல்வானும். க௮௪

தாபமுடன்விஜயாபுரிபட்டணம்
தானிருந்துவொருவேதியனும்
பாபமொழியவேகாவேரிதானங்கள்
பண்ணுவோமென்றுமனமகிழ்ந்து. க௮௫

ஆச்சியிடத்திலேசொல்லிக்கொண்டு அப்
பாதைவழியிலேதான்கூடி
தாட்சியில்லாமல்நடந்தாண்டி கட்டுச்
சாதத்தைத்தோளிலேபோட்டாண்டி. க௮௬

பாய்ச்சலூர்பட்டணம்போய்ச்சேர்ந்துவட
பத்திரகாளியொருகோயில்
ஆய்ச்சியிருக்குமந்தக்கரையில் ஒரு
ஆலவிருட்சத்தின்கீழாக, க௮௭

வேதியனுஞ்சுமைதானிறக்கி நதி
வீதினில்ஸ்நானங்கள்செய்தாண்டி

சாதம்பொசிக்கவருகையிலே ஒரு
சுற்பனேவந்ததைகேளுங்கடி. ௧௮௮

சோமன்மயிலாடும்மதுரைப்பட்டணம்
தேசத்திருந்தவேதியனும்
எழுபதுவயதுள்ளவேதியனும் ஒரு
ஏகியஆலமரத்தின்கீழ்வந்தான். ௧௮௯

வந்தவன்ஆலமரத்தின்கீழ் அன்ன
மயக்கமாகவேதான்படுத்தான்
இந்தப்பிராமணன்தானென்றான்
அன்னமில்லாதமயக்கமென்றான். ௧௯0

அன்னமயக்கமென்றேயொருப்புத்தி
யாகவேகட்டுச்சாதமவிழ்த்து
ஒன்றுக்குளொன்றுதெரியாமல் வந்த
ஊழ்வினேவந்ததைக்கேளுமையா. ௧௯௧

சாகமுடன்கெருடாழ்வாரும் ஒரு
சர்பத்தைக்காலிலேதான்பிடித்து
வேகமுடன்தான்கொத்திடவே அது
வேதனையாற்பாம்புநஞ்சுவிழ. ௧௯௨

சர்ப்பமுநஞ்சைகக்கிடவேகட்டுச்
சாதத்திமேலேபட்டிடவே
உற்பைநம்பனமறியாமல்
உண்டுமறையோனைத்தானெழுப்பி. ௧௯௩

கையிலேசாதத்தைப்போட்டானும் அந்த
ஐயனும்வாங்கிவயிற்றிலிட்டான்
மெய்யெலாம்நஞ்சுபரந்திடவேவுயிர்
மேவியேமனிடம்போக. ௧௧௪

பாம்புவிஷமென்றறியாமல் அந்தப்
பாய்ச்சலூர்பட்டணத்தாரிடம்போய்
விம்புமறையோனிடத்தில் ஒரு
விண்ணப்பஞ்செய்வதைக்கேளுமையா. ௧௧௫

வயதுசென்றபிராமணனும் அன்ன
மயக்கமாகவேதான்படுத்தான்
தம்முடன்விட்டுக்கட்டுசாதத்தைத்
தான்பொசித்தான்விதி தானிறந்தான். ௧௧௬

நல்லடக்கஞ்செய்யவேணுமென்று அந்த
நாட்டிலுள்ளோரைத்தானழைத்து
எல்லோரும்ஆலமரத்தடியின்கீ
ழிறந்துகிடக்கிறவேதியனை. ௧௧௭

பார்த்துஇவன்பழிசெய்தானென்று
பாரிககார்கையிலொப்பிவித்தான்
சேர்ந்துவடபத்திரகாளியின்கோவிலில்
திறமுடனிவனை அடைத்ததுவே. ௧௧௮

பத்திரகாளியின்கோவிலிலே யிந்தப்
பார்ப்பானும்ஆறுநாள்பட்டினியே

வித்தாரமாகவேபத்துக்கவிதை
விளம்பினான்பத்திரகாளியின்மேல். கசஅ

பார்ப்பானுங்கவிதைபடித்திடவே அந்தப்
பாய்ச்சலூர்பட்டணம்வந்ததுவே
தாம்பளிக்கும்வடபத்திரகாளியின்
சந்நிதிவேதியன்பிள்ளையின்மேல். உ௱

ஆவேசமாகவேவந்துசொல்லுமையன்
ஆலமரத்திலேவந்ததுவும்
தாவிகெருடனும்வந்ததுவும் அந்தச்
சாதந்தனில்விஷம்பட்டிடவும். உ௱க

பத்திரகாளியுரைத்திடவே அந்தப்
பாய்ச்சலூர்பட்டணமனைவோரும்
சித்திரமாகப்பிராமணன்காலிலே
தெண்டன்சமர்ப்பித்தனுப்பிவைத்தான். உ௱உ

பார்த்துப்பசித்தோர்முகம்பார்த்துப் பசி
யாற்றப்பழிவந்துசேர்ந்தாற்போல்
நேசித்தோரொருவருடன்கூடி அது
நிச்சயமாகவேபோதவாதித்தனும். உ௱ங

எந்தன்தலையில்விதித்தானையா வென்று
யெழுந்திருந்தான்போதவாதித்தனும்
சந்தக்கடையிலேகன்னமிட்டு கள
வாண்டதோர்கள்ளனைத்தான்பிடித்து. உ௱ச

கொண்டுவரச்சொல்லிதானிருத்தி முன்
கொலுவில்முடிந்திடுஞ்சாதமதை
உண்டவுடனேவிஷமேறி அவன்
ஒன்றுஞ்சொல்லாமல்மடிந்தானும். உ௱௫

பின்னையொருவனைக்கூட்டிவர அப்போ
பொரியம்பெடுக்க அவன்சாக
அன்னைப்படுத்திடும்பஞ்சணைமெத்தைமேல்
ஆங்காரமாய்போதவாதித்தனும். உ௱௬

பள்ளியறைக்காலிற்மேல்போட்ட னல்ல
பாம்பையுஞ்சுண்டுவிரல்தனையும்
அள்ளியவன்ராசன்முன்னேவைத்து அந்த
அஸ்திகளெல்லாங்கண்டபின்பு. உ௱௭

பார்த்து அரசன்மகிழ்ந்திருக்குமுன்னாள்
பாவனையெல்லாம்பணிந்துரைப்பான்
நேத்திராத்திரிபட்டணம்என்முறை
சேர்ப்பாய்ப்பார்த்துவரும்வேளை. உ௱௮

பத்திரகாளிஅழுததுவும் அவள்
பாதம்பணிந்துநான்கேட்டதுவும்
உத்திரவுமிந்தகாரணமெல்லாம்
உரைத்திடதீர்த்ததுவும். உ௱௯

இந்தப்படியாய்வேறொருபுத்தியாய்
யோசித்துநானொன்றுசெய்யவில்லை

அந்தப்படியெல்லாந்தான்கேட்டு அள
கேசனுமெத்தமனமகிழ்ந்து. உ௱ய

பெண்ணாய்ப்பிறந்தவள்பேச்சைக்கேட்டு நானும்
பேதைமையாகநினேந்தோமே
திண்ணமாய்சின்னப்பட்டோமே யென்று
செப்புவான்ராசனளகேசன். உகக

ஆழியுஞ்சூழ்ந்தபுவியிற்குள்ளே ரட்சித்
தாரையும்பட்சித்தாரந்நாளில்
கேளுங்காண்மந்திரிமார்களே யென்றள
கேஸ்பரனுங்கதைசொல்வாண்டி உகஉ

காவேரியென்றொருபட்டணமா மந்தக்
காசியிலேயொருமாமறையோன்
தேவாதிதேவனேவேண்டித்தவஞ்செய்தான்
தேவாதியென்றொருபிள்ளையீன்றான். உகங

பிள்ளைபிறந்துவளர்ந்துவருநாளில்
பெற்றதாயுமவளும்போய்விடவே
உள்ளங்கலங்கிவேதியனுமப்போ
ஊரினில்பிட்சைகள்தானெடுத்து. உகச

பிள்ளைகளாரையுங்காப்பாற்றி யிவன்
கிள்ளைமொழியாள்மனந்தேற்றி
தெள்ளமையாகவருகையிலேவினை
சேர்ந்தவகைதனைக்கேளுமையா. உகரு

பட்டணத்திற்பிட்சைபோடாமலே நித்தம்
பாரவனந்தனிலேதானேகி
சட்டமுடனவன்மூங்கிலரிசியைத்
தானெடுத்துவீட்டிற்கொண்டுவந்தான். உகசு

அங்கையினாலேசமைப்பான்குழந்தைகள்
அன்னமுண்டபின்பவன்போசிப்பான்
எங்கேயிவன்போனாலும் பிள்ளை
யெட்டியெட்டிநித்தந்தான்பார்க்கும். உகஎ

அங்கியெனுமக்கினிமூங்கிற் விதை
யானதுவும்பற்றிவருகையிலே
செங்கனிபோலவேநல்லபாம்பானது
தீப்பிடித்ததில்வேகையிலே. உகஅ

பக்கத்திலேபொன்வேதியனும் நல்ல
பாம்புபடுகிறதுன்பங்கண்டு
பொக்கென்றுகொம்பினால்தூக்கியே கீழாகப்
போட்டான்குளிர்ந்தமணல்தனிலே. உகசு

பாம்பைப்பார்ப்பானும்ரட்சிக்கவே நல்ல
பாம்பு அவனைவழிமறித்து
வீம்பாகவேபோரீர்மறையோனே நானும்
வெண்பசியாயிருக்கையிலே. உஉய

முன்னேதடிகொண்டபாம்புகொல்ல அவன்
முக்கணவன்செயலென்றுசொல்லி

அன்னையில்லாத குழந்தைக்குவேறொரு
ஆதாரமில்லையென்றேனினைந்து. உ௨௧

நிற்கிறவேதியனைப்பார்த்து வெகு
நேசமாய்நல்லபாம்பானதுமென்
பல்லுக்கிரையாகவேணுமையா நீயும்
பார்ப்பானேகிட்டவாருமென. உ௨௨

பாம்புவுரைத்தமொழிகேட்டு அந்தப்
பார்ப்பானுமெத்தமனங்கலங்கி
வீம்புவுரைக்கும்நாகேந்திரனே ஒரு
விண்ணப்பஞ்சொல்கிறேன் கேளுமையா. உ௨௩

புத்திராருபேருண்டெனக்குப் பிள்ளை
பெற்றவளேமனிடத்திற்சென்றாள்
சித்தியாய்மூங்கிலரிசிகொண்டு அவாள்
சீவனைக்காப்பாற்றநான்போயி. உ௨௪

அன்னஞ்சமைத்துக்கொடுப்பேனையா பிள்ளை
யாசையொன்றேயெனக்கல்லாமல்
பின்னையெனக்கொன்றுமில்லையையா வென்று
பேதமையாய்மறையோனுரைக்க. உ௨௫

சற்பமுங்கேட்டுமனமகிழ்ந்து மறையோன்
தன்கையில்நாகமணிகொடுத்து
கற்பகாலமெல்லாந்தான்பொசிக்கப்பிள்ளை
கையிற்கொடுத்துவாவென்றுரைத்து. உ௨௬

சத்தியம்பண்ணிசர்ப்பம்விட ஐயன்
தான்கடந்துபிள்ளைக்கையிலிட
இத்தனைதாமதமென்னகாணையனே
யெங்களுக்குவகைசொல்லுமென்றார். உஉஎ

காட்டில்நடந்ததோர்சேதிகளையெல்லாம்
காம்பிரியமாகவேதானுரைத்து
நாட்டிலேநீங்களும் வாழ்ந்திருங்களென்று
நாகமிருககுமிடத்தில்வந்தான். உஉஅ

பெற்றபிள்ளைக்குப்புத்திசொல்லியெந்தன்
போனசத்தியம்காக்குமென்று
அத்தன்கழுத்தினிலாபரணு வுந்தன்
சித்தப்படியேமுடியுமென்றார். உஉகூ

நீதிநெறியுள்ளவேதியன்சொன்னதை
நிண்ணயமாகவேதான்கேட்டு
பாதிமதியோன்செய்வதனால் வெகு
பாவமுடிவதைக்கேளுமையா. உ௩௰

சிவனைரட்சித்தவேதியனேஉன்னைத்
தீண்டுவேனென்றுசொன்னதில்லை
ஆவியைவைப்பதுமில்லையென்று நாகம்
ஐயன்முன்பாகவேதானிறக்க. உ௩க

பாம்புமடிந்ததைவேதியன்கண்டங்கே
பாவம்நமக்குப்பலிக்குமென்று

தீம்புகள்கண்ணாலேகண்டோமென்றுசொல்லி
செத்தான்நாக்கைப்பிடிங்கியங்கே. உ௫உ

அன்னஞ்சமைக்கவொரியாமல்மைந்தருக்
காருமுதவியில்லாமல்
சின்னஞ்சிறுவர்களூாறுகுழந்தையுஞ்
சேர்ந்ததுயேமனிடமாக. உ௫௩

ஊழிவினைகளுமிப்படிவந்திடு
முற்றபிரதானிமந்திரிகளே
காளியருள்பெற்றபோதவாதித்தனைக்
காரணமாகநினைத்தோமோ. உ௫௪

முந்தப்பிறப்பிலேதேவாதிதேவரு
மூவருந்தாயுந்தகப்பனுமாய்
இந்தப்பிறப்பிலேபோதவாதித்தனை
யல்லாமல்வேறேயொருவரில்லை. உ௫௫

என்னவரசன்மொழிந்திடவே யங்கே
யேற்றசபையோர்களெல்லவரும்
நன்றுமயிலோன்செயலான மந்திரி
நான்முகனுக்குச்சரியிடலாம். உ௫௬

அப்படியாருமொழிந்திடவே அதில்
ஆதிமந்திரிசொல்வார்நீதியுடன்
இப்படிராஜாதிராஜனுமந்திரியு
மெப்போதும்வாழ்ந்துவளர்ந்திருக்க. உ௫எ

செப்பமதாகமொழிந்திட அப்போ
தேசத்திலெல்லவருங்கூடி
மெய்ப்படியாகவிளங்கியதைக்கண்டு
மெத்தவேலோகமெல்லாமகிழ்ந்து. உ௱அ

பூவுலகத்திலேயாவருங்கூடியே
பூமலறனேகமையா
தாவியதங்கம்பொன்வெள்ளிமலருடன்
சாற்றுமலர்களனேகமையா. உ௱௯

மாரிபொழிந்திடும்போலேபொழிந்திட
வாழிகள்சொல்லுவார்கள்கேள்வியுடன்
காரியமாகியசங்கரனேங்கார்
கந்தரிருபதந்தான்வாழி. உ௪௰

கூறியமாயன்தான்வாழிபொதிகைக்
கும்பனிருபதந்தான்வாழி
சூரியர்சந்திரர்தான்வாழிமிகத்
தோன்றியதேவாபதம்வாழி. உ௪௧

சுந்தரிகாளியும்ராஜமந்திரியுஞ்
சிந்தசொல்லியமூவருந்தான்வாழி ஐயர்
செந்தமிழ்தந்திரஞ்சின்னதம்பி
செப்புங்கும்மிகாளும்வாழியதே. 6834 உ௪உ

நாலுமந்திரிகும்மி-முற்றிற்று.

# புத்தக வி

கீழ்கண்ட புஸ்தகமும் இன்
யானவர்கள் அடியிறகண்ட வி
தபால் மூலமாய் அனுப்பப்படு

| | | |
|---|---|---|
| | | ரூ. |
| ஜாதகாலங்காரம் மூலமும்-வி[illegible]தயுரையும் | ... | 2 0 |
| கணிதமுருகசேகரம் | ... ... ... ... | 1 0 |
| ஹோராசாஸ்திரம் | ... ... ... ... | 1 0 |
| கௌசிக சிந்தாமணி 1-ம் பாகம் | ... ... | 0 14 |
| டிை 2-ம் பாகம் | ... ... ... ... | 1 [illegible] |
| டிை 3-ம் பாகம் | ... ... ... ... | |
| அற்புத பூலோகரம்பை கதை | ... ... ... | |
| சர்வ கனவின் பலன் | ... ... ... ... | |
| கனவுகாணும் சாஸ்திரம் | ... ... ... ... | |
| சோதிட துலாதாரம் | ... ... ... ... | |
| சிவசாமி அரிச்சந்திர நாடகம் | ... ... ... | |
| நீதிநெறி அரிச்சந்திர நாடகம் | ... ... ... | |

எமது விலாசம்:—

டி. கோபால் அண்டு கோ.

வேப்[illegible]ரி போஸ்டு, மதரா